தென்மொழி

தமிழ்க் குலமே!

முன்னர் இருந்தவர் முத்தமிழ் நாடென
முழக்கியது இதைத்தானே? – பெருப்
மன்ன ரெலாம், உயிர்மானம் கொண்டே, புகழ்
மணந்தது இந்நிலந் தானே?

கன்னல் இளந்தமிழ், கண்ணெனக் கொண்டவர்
காத்தது இம்மொழி தானே? – பல
இன்னல் வளைத்திட, இன்னல் வளைத்திட
இகழ்வதும் இதைத் தானே?

முன்னை இருந்தவர் முரசொலி பனிமலை
முகட்டில் ஒலித்த திலையோ? – இங்கு
முன்னிய மரக்கலம் அணிமணி உலகம்
முழுதும் இறைத்ததிலையோ?

அன்னை ஒருத்தி மறத்தியன்றோ? நமை
ஆர்க்கவள் பெற்றெடுத்தாள்? – இளங்
கன்னி நறுந்கமிழ், கன்னி நறுந்தமிழ்
காத்திடுவீர் மறவீர்!

குன்றினைத் தோளெனக் கொள்கை உயிரெனக்
கூறியது ஆர் தமிழா? – போர்
முன்றிற் புறமுது கிட்ட முகத்தினில்
முகம்பட விழித்தவர் யார்?

"சென்று, வென்றுல்வரு வேன்; இலை வாள்வரும்;
சிறுவனுளான் அனுப்பு – அவன்
நின்று பட்டான்எனின் நின்னுயிர் அனுப்"பென
நிகழ்த்தியது ஆர் தமிழா?

கூட்டுக்குள் எத்தனை நாள் உயிர் தங்கிடும்
கூட வருவதெவை காண்! – தமிழ்
நாட்டுக் குழைத்திட, நாட்டுக் குழைத்திட
நாட்டமிலார் எவரே?

சுவடி 13
ஓலை: 3.
விலை
உரு: 1.

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

ஒரு மனம்!

பொருமையால் ஒருமனம் புழுங்கிச் செத்தது!
இராமை யாலும் இருக்கின்ற மையாலும்
எழுந்தெழுந் தமர்ந்து விழுந்துகொண் டிருந்தது!
உழுந்தளவு கருத்தும் உரலளவு எரிச்சலும்
கலந்து கலந்து எங்கும் கதைத்துக் கொண்டிருந்தது!
புலந்துள நெஞ்சம் புகைவான் சூழ்ந்தது!
மக்கள் அதற்கு மரங்களாய்ப் பட்டனர்!
சிக்கலே உளத்தில் சிணுக்குவிழுந் திருந்தது!

வருவோர் போவோர் எல்லா ரிடமும் —
தெருவோ ரத்தின் சிறுசிறு பிள்ளைகள்
குட்டான் குட்டானுய்க் கொள்ளைக்குப் போதல்போல்
முட்டிமுட்டி முடியாமல், பலமுறை —
கழிச்சல் கண்டவன் கால்மேல் எல்லாம்
இழுப்பிக் கொண்டே எழுவது போல,
எழுதி எழுதி மனவளம் இளைத்தது!
புழுதியில் புரண்டு, புழுக்கையில் உருண்டு,
தூவலைச் சேற்றிலே துவைத்துத் துவைத்து
வெள்ளை யேருமல் வெளுத்துக் கட்டியது!
தொள்ளையர் சிற்சிலர் கொள்ளை என்றே
தம்பல வாயர் தின்பது போல
அம்பலில் எல்லாம் அதக்கிக் காட்டினர்!

[அட்டை 3-ஆம் பக்கம் பார்க்க]

[முகப்புப் பாடல் தொடர்ச்சி]

வீட்டுக் கொராள்வர, வீட்டுக் கொராள்வர
வேண்டுகின்றோம் மறவீர்! - சிறைக்
காட்டுக் கென்றும்சுடு காட்டுக்கென்றும், மறக்
கழலணி பெறுவோமே!

அற்றைத் தமிழ்க்குலம்! அற்றைத் தமிழ்க்குலம்!
ஆண்ட தமிழ்க் குலமே! – மொழிப்
பற்றை இழந்தனை! பான்மை இழந்தனை!
பகலில் வெருண்டனையே!

ஒற்றைத் தனியவன் ஆயினும் தமிழ்மகன்
உளங்குன் றிடுவானே? - தனைப்
பெற்றெடுத் தாள்தமிழ்த் தாயெனின், அவள்படும்
பீழை பொறுப் பானே?

(வானம்பாடி 15—2—59-இல் வெளிவந்தது.)

தென்மொழி

இலக்கிய இதழ்

சுவடி: 13. ஓலை: 3.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர் நின்றே!

மீனம்-மேழம்-தி. பி. ௨00௭-மார்ச்சு-ஏப்பிரல்-'1976.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-5. தமிழகம்.

ஆசிரியர் எழுத
இயலாத நிலையில் உள்ளார்.—அமைச்சர்.

குலப்பட்ட வரலாறு.

பட்டம் என்னும் சொல் வரலாறு :

பட்டுதல்-அடித்தல், தட்டுதல். பட்டடை-சுத்தியலால் அல்லது சமட்டியால் தட்டுவதற்கு அடையான கல் அல்லது இரும்பு.

பட்டறை-கொல்லரும், தட்டாரும் தட்டி வேலை செய்யும் அறை. பட்டசாலை-அங்ஙனம் தட்டி வேலை செய்யும கூடம்.

பட்டு-பட்டம்—தட்டையாகத் தட்டி அடிக்கப்பட்ட தகடு. பட்டு—பட்டை-தகடு. தட்டையான மரவுரி, அது போன்ற பூச்சு. பட்டம் - வ. பட்ட.

பட்டை-பட்டையம்-பட்டயம்—ஆவணம் பொறிக்கும் தகடு.

பட்டங் கட்டுதல் என்னும் வழக்கு :

ஊர்த் தலைவர்க்கு, அவர் பதவி குறித்த பெயர் பொறித்த தகட்டை நெற்றியிற் கட்டுவதே பட்டங் கட்டுதல் எனப்பட்டது. அதனால், ஊர்த் தலைவனைக் குறிக்கும் பெயர்களுள் பட்டக்காரன் என்பதும் ஒன்று. எ-டு: பழைய கோட்டைப் பட்டக்காரர்.

மக்கள் தலைவர் கிழவன், வேள், மன்னன், கோ, வேந்தன், மாவேந்தன் எனப் பலதிறத்தர்,

ஊராளி, நாடன், நாடான், நாட்டாண்மைக்காரன், நாட்டான், நாடாளி, குடும்பன், பண்ணையாடி, மூப்பன், அம்பலகாரன், கவுண்டன், தலைவன், சேர்வை, சேர்வைகாரன், பட்டக்காரன், பெரியதனக்காரன், தேவன், மன்றாடி, மந்திரி என்பன ஊர்த் தலைவனை அல்லது நாட்டுத் தலைவனைக் குறிக்கும் பெயர்கள்.

பலவூர் சேர்ந்தது நாடு. ஒன்றுக்கு மேற்பட்டவை பல. பண்டைக் காலத்தில் முல்லை நிலத்தலைவன் குறும்பொறை நாடன் எனப்பட்டான்.

வேந்தன், மாவேந்தன் ஆகிய இருவர்க்கே முடிசூடும் உரிமையுண்டு. ஏனைத் தலைவர்க்கெல்லாம் பட்டங் கட்டுவதே பண்டை வழக்கம்.

பாண்டியன், சோழன், சேரன் என வேந்தர் மூவர். அவர் வலிமையிழந்த பிற்காலத்தில், முடி சூடும் உரிமை ஐவகை யரசர்க்கும பொதுவாயிற்று.

முடிவேய்தலாலேயே வேந்தன் என்னும் பெயர் தோன்றிற்று.

மே—மேல். மே—மேய். மேய்தல்—மேலிடுதல், மேலணிதல் மேய்-வேய். வேய்தல்—மேலிடுதல். மேலணிதல், முடிசூடுதல்.

வேய்ந்தோன் — வேய்ந்தன் — வேந்தன்—வேந்து. ஒ. நோ : காய்—காய்ந்து—காந்து.

கொன்றைவேந்தன்—கொன்றை மாலை சூடிய அல்லது அணிந்த சிவன்.

ஊரன் ஒரூர்த்தலைவன்; வேள் சிலவூர்த் தலைவன்; மன்னன் அல்லது பெருவேள் பலவூர்த் தலைவன்; கோ (வேந்தன் குடும்பத்தைச் சேர்ந்த) இளவரசன் அல்லது துணையரையன்; வேந்தன் ஒரு தமிழ் நாட்டுத் தலைவன்; மாவேந்தன் முத்தமிழ் நாட்டு அல்லது தமிழகத் தலைவன். நாடுகிழவோன் என்பது, ஊர்த் தலைவனுக்கு மேற்பட்ட குறுநில மன்னரையும் பெருநில அரசரையுங் குறிக்கும்.

முதற்காலத்தில் ஒரூர்த்தலைவன் பெயர், குறிஞ்சி முல்லை முதலிய ஐந்திணை நிலத்திற்கும் வெவ்வேறா யிருந்தது. அக்காலத்தில் ஊரன் என்பது மருத நிலத்து ஊர்த்தலைவன் பெயர்.

பட்டங் கட்டுவது நெற்றிக்கழகு செய்வதால், நாளடைவிற் பெயர் பொறிக்காத பட்டம் பெண்டிர் நெற்றியணியாயிற்று.

தலைவர்க்குக் கட்டும் பட்டம் சிறப்புப்பெயர் தாங்கி நின்றதனால் பிற்காலத்திற் சிறப்புப் பெயரெல்லாம் பட்டம் எனப்பட்டன.

பட்டம் என்னும் சொற்பொருள்கள் :

பட்டம் — 1. பட்டையான துண்டு. 2. சட்டங்களை இணைக்க உதவும் தகடு. "ஆணிகளும் பட்டங்களுமாகிய பரிய இரும்பாலே கட்டி" (நெடுநல். 80, உரை). 3. பட்டை வடிவு. 4. ஆட்சித் தலைமைக்கு அறிகுறியாக நெற்றியிலணியும் பொற்றகடு. "பட்டமுங் குழையு மின்ன" (சீவக-472). 5. பெண்டிர் நெற்றியணி, "பட்டங் கட்டிப் பொற்றோடு பெய்து" (திவ். பெரியாழ். 3 : 7 : 6), 6. மணிகளில் தீரும் பட்டை. 7. துணி, [அக. நி], 8. பெருங்கொடி[பிங்] 9. காற்றாடி, "பிள்ளைகள் பற்பல வுயர்பட்டம் விடல்போல்" [திருப்போ. சந், பிள்ளைத், சப்பாணி 8], 10. உரோமானியக் குருமார் உச்சந்தலையில் வட்டமாக மழித்துக்கொள்ளும் இடம். 11. ஆட்சிப் பதவி. [பிங்.] 12. ஆட்சி 13. பதவிப்பெயர்; "பட்டமும் பசும் பொற் பூணும் பரந்து" [சீவக. 112] 14 சிறப்புப் பெயர் எ—டு: தென்னவன் பிரமராயன், உத்தம சோழப் பல்லவராயன், 15. கல்விப்பெயர், எ—டு: புலவன், முதுகலை, பண்டித மணி, பெரும் பேராசிரியர், 16. குலப்பெயர், எ—டு: பிள்ளை, முதலியார்.

கழகக் [சங்கக்] காலத்தில், இக்காலத்திற்போற் பிறவிக் குலப் பட்டப்பெயர் வழங்கவில்லை, கூலவாணிகன், அறுவை வாணிகன், மருத்துவன், வண்ணக்கன், கணியன், கிழார் என்பன போன்ற தொழில் வகுப்புப் பெயர்களே அடைமொழிகளாக வழங்கிவந்தன. எ-டு : கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர்,

கிழார் என்பது உழவர் வகுப்புப் பெயராகத் தோன்றுகின்றது. ஆயின், அரிசில் கிழார், ஆலத்தூர் கிழார், ஆவூர் கிழார், இடைக் குன்றூர் கிழார், காரி கிழார், குறுங்கோழியூர் கிழார். குன்றூர் கிழார், கூடலூர் கிழார், கோவூர் கிழார், துறையூர் ஓடை கிழார், நொச்சி நியமங் கிழார், பெருங்குன்றூர் கிழார், மாங்குடி கிழார், வடமோதங் கிழார் எனப் பெரும்பாலும் இயற்பெயரின்றி ஊர்ப் பெயரடுத்த தொழிற் பெயராகவே வழங்கி வந்திருக்கின்றன, பிற் காலத்துச் சேவூர்க்கிழார்—சேக்கிழார் என்பதும் அங்ஙனமே,

ஆவூர் மூலங்கிழார், ஐயூர் மூலங்கிழார் என்னுங் கழகக் காலப் பெயர்களில், மூலம் என்பது நாளைக் குறிப்பதாகக் கருதினுர் பண்டாரகர் உ. வே, சாமிநாதையர்,

கிழார் என்பது கிழவர் என்பதன் மரூஉ, கிழவர் என்பது கிழவன் என்பதன் உயர்வுப் பன்மை, கிழவன்—நிலத்திற்குரியவன், உழவன்.

> "செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்
> தில்லாளின் ஊடிவிடும்"

என்னுங் குறளில் (1039), கிழவன் என்பது நிலக்கிழவனுன உழவனைக் குறித்தல் காண்க.

கிழான் என்னும் மரூஉ இன்று இந்தியில் கிசான் என்று திரிந்து வழங்கி வருகின்றது.

கதப்பிள்ளை அல்லது கந்தப்பிள்ளை என்பது, புறநானூற்றுப் பாடலாசிரியருள் ஒருவர் பெயராகக் குறிக்கப்பட்டுள்ளது, அது இக்காலத்திற் போற் பிள்ளைப் பட்டத்தோடு கூடிய மாந்தன் பெயரன்று; முருகனைக் குறிக்கும் தெய்வப்பெயர் ஒரு புலவர்க்கு இடப் பட்டதே. 'விநாயகர்" என்னும் ஆனைமுகத் தெய்வ வணக்கம், கி, பி, 5-ஆம் நூற்றுண்டின் பின்னரே தமிழகத்திற் புகுத்தப்பட்டது, அதற்கு முன், முருகனுக்கே சிவன் மகன் என்னும் கருத்தினுல் பிள்ளை அல்லது பிள்ளையார் என்னும் பெயர் வழங்கிற்று. பிற்காலத்தில் வடநாட்டினின்று இறக்குமதியான ஆனைமுகவன், காலத்தால் இளைய பிள்ளையாயினும், ஆரியச் சார்பினுற் சிறப்புப்பெற்று மூத்த பிள்ளையாக்கப் பட்டான்.

ஆரிய வருகைக்கு முற்பட்ட தமிழர் வகுப்புக்களெல்லாம் தொழில் வேறுபாட்டால் ஏற்பட்டனவும், விருப்பப்படி மாறக்கூடியனவும், கூட்டுறவிற்கு முட்டுக் கட்டையாகாதனவுமா யிருந்தன. ஆரியர் வந்தபின், கழகக்காலத்தில், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்னும் நாற்பெருந் தமிழ் வகுப்புக்கள் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்னும் ஆரியப் பிறவிப் பெருங்குலங்களாக மாற்றப் பட்டன. அதன்பின், அந்நாற் பெருங் குலங்களும் நூற்றுக்கணக்கான சிறு குலங்களாகப் பிரிக்கப்பட்டும் பெருக்கப்பட்டும் போயின. தமிழரின் ஒற்றுமையையும் வலிமையையுங் குறைப்பதற்குப் பிறவிக் குலப் பிரிவினையே தலைசிறந்த வழியாதலின் குலவொழுக்கக் கட்டுப்பாடுகளும் வேறுபாடுகளும் வரவரக் கண்டிப்பாக்கப்பட்டு வந்தன.

பெயர், உடை, உணவு, அணி, குடியிருப்பு, தொழில், பழக்க வழக்கம், சடங்கு, தெய்வம், பேச்சு, இடுகாடு அல்லது சுடுகாடு முதலிய எல்லா வகைகளிலும் குலங்கள் வேறுபடுத்தப்பட்டன.

பெயரளவில் வேறுபாட்டைத் தெளிவாக்குதற்கு, குலங்குறித்த சொற்களும் ஈற்றிற் பட்டப்பெயராகச் சேர்க்கப்பட்டன. அவை பெரும்பாலும் குலத்தலைவன் அல்லது தொழிற்றலைவன் அல்லது ஊர்த்தலைவன் பட்டப் பெயராகவே இருந்து வருகின்றன.

தேவன் என்பது குலத்தலைவன் பட்டம்; முதலியார் என்பது தொழிற்றலைவன் பட்டம்; நாடார் என்பது ஊர்த்தலைவன் பட்டம்.

நாடன்-நாடான்-நாடார். நாடன்-நாட்டான்-நாட்டார் ரகர மெய்யீற்றுச் சொற்கள் உயர்வுப் பன்மை குறிப்பன.

படை முதலியார் அல்லது சேனை முதலியார் என்பதன் குறுக்கமே முதலியார் என்பது. அரிய நாயக முதலியார் விசயநகரப் படைத் தலைவருள் ஒருவர். அவர் பதவிப் பெயர்க்குறுக்கம், முதற்கண் அவர் மக்கட்கும, பின்னர் உறவினர்க்கும், அதன்பின் அவர் குலத்தாராகக் கருதப்படும் அனைவர்கும் பட்டப்பெயராக வழங்கி வருகின்றது. இங்ஙனமே ஏனையவும. இவ்வழக்கம் மேனாடுகளில், அரசர் மக்கட்கும் பெருமக்கள் மக்கட்கும் வழங்கிவரும் மதிப்புறவுப் பட்டம் (Courtesy title) போன்றதே. ஆயின், அங்குத் தந்தை பட்டத்தினும் தாழ்ந்ததே. அடைமொழியாகவோ, கடைமொழியாகவோ மக்கட்கு மட்டும் வழங்கிவரும், இங்கோ, தந்தையின் பட்டமே மக்கட்கு மட்டுமன்றி, உறவினர்க்கும், குலத்தாரென்று கருதப்படும் அனைவருக்கும் இறுதிச் சிறப்புப் பெயராக வழங்கி வருகின்றது.

முதலியார் என்பது போன்றவே நாயர், நாயுடு என்பனவும்.

தண்ட நாயன் - (கேரள நாட்டுப்) படைத்தலைவன். நாயன் என்பதன் உயர்வுப் பன்மை நாயர். தண்ட நாயர்-நாயர் (குறுக்கம்)

நாயன் - நாயகன் - நாயக்கன் - நாய்க்கன். திருமலை நாயக்கன், போடி நாயக்கன், பெத்த நாயக்கன் என்பன தெலுங்கப் படைத்தலைவர் பெயர் தண்ட நாயக்கன் - நாயக்கன் (குறுககம் . நாயக்கர், நாய்க்கர் என்பன உயர்வுப பன்மை.

விசயநகரப் பேரரசின் படைத் தலைவராகவும் படிநிகராளிய ராகவுமிருந்த சிலர், பிற்காலத்தில் தமிழநாட்டு அரசராயினர்.

நாயன் - நாயடு - நாயுடு (தெலுங்கு), நாயர் நாய்ச்கன், நாயுடு என்னும் பட்டப்பெயர்கள், இடைக்காலப் படைத் தலைவர்க்கு வழங்கினது மட்டுமன்றி, அவர் வழியினர்க்கும் வழிவழி வழங்கி வருதல் காண்க.

இங்ஙனமே, எட்டி என்னும் வணிகர் பட்டப்பெயரும், எட்டுதல் - உயர்தல். எட்டு - எட்டம் - உயரம், உயர்வு. எட்டி - உயர்ந்தவன் வணிகருட் சிறந்தோன்.

எட்டி என்பது, கழகக் காலத்தில் மூவேந்தரும் வணிகர் தலைவனுக்கு அளித்துவந்த சிறப்புப்பெயர். அது இக்காலத்து அரசர், நாண்மங்கல விழாவில், அறிவாற்றல் பொதுநலத்தொண்டு அருமறச்செயல் முதலியவற்றிற்கு அளித்துவரும் சிறப்புப் பெயர்கள் (Birthday Honours) போன்றது.

எட்டி - செட்டி. ஒ. நோ : ஏண் - சேண்.

வடநாட்டுப் பிராகிருத மொழிகளில் எகரக் குறிலின்மையால், அவற்றிற் செட்டி என்பது சேட்டி என நீளும். அது இன்றுசேட் எனக் கடைக் குறைந்து வழங்குகின்றது. செட்டி என்பது சிரேஷ்டி என்னும் வடசொல்லின் திரிபன்று.

'இப்பர் பரதர் வைசியர் கவிப்பர்
எட்டியர் இளங்கோக்கள் ஏர்த்தொழிலர் பசுக்காவலர்
ஒப்பில் நாயகர் விஞைர் வணிகரென்
றத்தகு சிலேட்டிகள் செட்டிகள் பெயரே.''

என்பது திவாகர நிகண்டு.

''நாய்கர் எட்டியர் வணிகர் பரதர்
தாழும் பிறவும் தனவைசி யர்க்கே.''

என்பது பிங்கல நிகண்டு.

நாய்கர் என்பது வணிகரைக் குறிப்பின், நாவிகர் என்பதன் மரூஉ. கடைக் கழகக் காலத்திலேயே. நிலவாணிகத் தலைவனுக்குச் சாத்தன், சாத்தவன். சாத்துவன். சாத்துவான் என்றும்; நீர்வாணிகத் தலைவனுக்கு நாவிகன், நாய்கன் என்றும், சிறப்புப் பெயர்கள் வழங்கின. அதனால், கோவலன் தந்தை மாசாத்துவான் என்றும், கண்ணகி தந்தை மாநாய்கன் என்றும், பெயர் பெற்றிருந்தனர்.

சார்த்து - சாத்து - காளை கோவேறு கழுதை, குதிரைகளின் மீது பொதியேற்றிச் செல்லும் நிலவணிகக் கூட்டம்,

நாவு - நாவாய் - கடல்நீரைக் கொழித்துச் செல்லும் கப்பல்,

நாவு - நாவி - நாவிகன் - கப்பற்காரன், கடல் வாணிகன்.

ஆதிரை கணவனான சாதுவனும், நீர்வாணிகர் செய்தவனேனும், பெற்றோராலிடப்பட்ட நிலவாணிகன் பெயரைத் தாங்கினவனாயிருந்திருக்கலாம். சாத்துவன் - சாதுவன்.

கடைக் கழகக் காலத்தில், தமிழரின் இயற்பெயரோடு குலப் பட்டப்பெயர் இன்றுபோல் இணைந்து வழங்கியதில்லை. ஆரியச் சார்பான பிறவிக் குலப் பிரிவினை அக்காலத்தேயே நாற்பாலளவில் வேரூன்றியிருந்ததேனும், மூவேந்தராட்சியும் முடிந்த கசு - ஆம் நூற்றாண்டின் பின்னரே, சிறுகுலப் பட்டப்பெயர்களெல்லாம் சிறந்தெழுந்ததாகத் தோன்றுகின்றது.

அப்பட்டப் பெயர்கள் எல்லாப் பிறவிக் குலத்தார்க்கும் நிலைத்து நின்றவையல்ல, அவரவர் அல்லது அவ்வக் குலத்தார் ஆற்றலுக்கும் முன்னேற்றத்திற்கும் விருப்பத்திற்கும் ஏற்றவாறு, மாறியும் வந்துள்ளன, இதைக் "கள்ளன் மறவன் கனத்தாலகம்படியன், மெள்ள மெள்ள வந்துபின் வெள்ளாளனானனே" என்னும் பழமொழியும் உணர்த்தும்.

முதலியார் என்னும் பட்டம், விசயநகரப் பேரரசின் படைத் தலைவரான அரியநாயகம் போன்ற வெள்ளாளரின் வழியினர்க்கு, முதற்கண் சிறப்பாக வழங்கிற்று, அதன்பின், சோழர் காலத்திற் செங்குந்தப் படை தாங்கிப் பொருத நிலைப்படை மறவரின் வழியினரான நெசவுத் தொழிலாளர்க்கு. ஒருபுடை யொப்புமைபற்றி அப்பட்டம் வழங்கிற்று. அதன்பின்னர், அகம்படியருள் ஒரு சாரார் அப்பட்டத்தைத் தாமாகத்தமக்கு இட்டுக்கொண்டனர். இன்றோ, முதலிப் பெண்ணை மணந்தவரும், நெசவுத்தொழில் செய்வாருள் ஒரு சாராரும், தமக்கு முதலியார்ப் பட்டம் சூட்டிக்கொள்கின்றனர். இனி, ஒரு சிலர் தம் விருப்பம் ஒன்றே காரணியமாகத் தம் பெயருக்குப்பின் முதலியார்ப் பட்டத்தை இணைத்துக் கொள்கின்றனர். இங்ஙனம், வெள்ளாண் முதலியார், செங்குந்த முதலியார், அகம்படிய முதலியார், முதலிப் பெண் கொண்ட முதலியார், நெசவுத்தொழில் முதலியார், தான்தோன்றி முதலியார் என அறுவகை முதலியார் உளர்.

இத்தகைய வகையீடு ஏனைச்சில குலங்கட்கும் ஒக்கும்.

பிள்ளைப் பட்டமோ இன்று பிராமணர் தவிரப் பிற குலத்தார்க்கெல்லாம் பொதுவாய் விட்டது. ஆயினும். அது அவ்வக் குலத்திற்கேற்ப வெவ்வேறு அளவு மதிப்புள்ளதாயுள்ளது.

இனி, "வேந்துவிடு தொழிலிற் படையுங் கண்ணியும்
வாய்ந்தன ரென்ப அவர்பெறும் பொருளே"

என்னும் தொல்காப்பிய நூற்பாவிற்கு (மரபியல், அஙு) ஏற்ப சோழர்க்குப் போர்க்காலத்திற் பொருநராக உதவி வந்ததனாற் படை

யாட்சியென்று பட்டந்தாங்கும், ஒரு சார் உழுதூண் வேளாளரான தமிழருள் ஒரு சிலர், தெலுங்கர்க்கேயுரிய இரெட்டியார் என்னும் பட்டப் பெயரைத் தமக்கு வழங்கி வருவது, ஒரு வேடிக்கையான செய்தியே.

இங்ஙனம், உண்மைக்கும் பகுத்தறிவிற்கும் பொருந்தாத குலப் பட்டப் பெயர்களை, இந்தியரையெல்லாம் குலப்பிரிவற்ற ஒரே குமுகாயமாக்க வேண்டுமென்னுங் குறிக்கோள் கொண்ட பேராயக் கட்சியினரும், அக்கட்சியைச் சேர்ந்த மாநில அமைச்சரும், நடுவண் அரசு மந்திரிமாருங்கூட, தமக்கு வழங்கிவருகின்றனர், இதனால், மூதிந்தியர்க்கு, சிறப்பாகத் தமிழர்க்கு மூவகைக் கேடுகள் நேர்கின்றன,

[க] குமுகாயத் தாழ்வு,

ஆரியச் சார்பான பிறவிக் குலக் குமுகாய ஏணிப்படிகளுள், ஒவ்வொன்றும் ஒவ்வொரு குலத்திற்கு நிலையாக ஒதுக்கப்பட்டிருப்பதால், தமிழர் அல்லது திரவிடர் அல்லது பழங்குடி மக்கள் வாழ்நாள் முழுதும் எத்துணை முன்னேற்ற முயற்சி செய்யினும், அவ்வேணியின் உச்சப்படியை அல்லது தமக்கு மேற்பட்ட படியை அடையமுடியாது. ஒவ்வொரு பட்டமும் ஒவ்வொரு குலத்தின் முத்திரையா யிருப்பதால், அப்பட்டத்தைத் தாங்கிக்கொண்டே மேலெழுவது, ஒருவன் தன் பாதத்திற் பாருங்கல்லைக் கட்டிக்கொண்டு உயரக் குதிப்பது போன்றாகும்,

[உ] ஒற்றுமைக் குலைவு,

ஒரு வகுப்பார் சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை. ஒற்றுமையின்றேல் உரங்குன்றிப் போவதால். இன முன்னேற்றத்திற்கு எட்டுணையும் இடமில்லை. ஆகவே, உலகுள்ள அளவும் அஃறிணைபோன்றே நின்ற நிலையில் நிற்றல்வேண்டும்.

[ங] பகுத்தறிவு வளர்ச்சியின்மை.

ஒருவன் தன் இயற்பெயரோடு ஒரு பிறவிக்குலப் பட்டப்பெயரை இணைத்துக் கூறுவது. தான் மேற்கொண்டுள்ள தொழிலுக்குச்சற்றும் பொருந்தாததும், வேறெந் நாட்டிலும் இல்லாததும், பகுத்தறிவிற்கு ஒவ்வாததும், முன்னோர் மரபிற்கு முற்றும் முரணானதும், எவ்வகை நற்பயனுமற்றதும், நுண்ணறிவு வளர்ச்சிக்குத் தடையானதுமாய், இருத்தலால், அதை அறவே விட்டுவிடுவதே உயர்திணையொழுக்கத்திற்கும் தமிழன் தலைமைக்கும் தக்கதாம்,

மேலும், இற்றைத் தலைமை மந்திரினியாரின் இருபான்வகைப் பொருளியல் வளர்ச்சித் திட்டத்திற்கும், பிறவிக் குலப் பட்டப்பெயர் வழக்கு பெரு முட்டுக்கட்டையென்பதை, உணர்தல்வேண்டும்,



(ஞா. தேவநேயன்.)

உலகியல் நூறு.

— பெருஞ்சித்திரன் —

[மொழிபெயர்ப்பு : த- முத்துக்குமரன், க. இ.]

1. உலகம்.

1. இயல் நிலை.

புடவிபல ஒன்றுகடல் புன்மணலிஞ் ஞாலம்
அடவியென மீன்செறிவாம் அண்டம்பல் கோடி
இடவரைகள் எண்டிசைகள் இவ்வுலக வாக்கம்
கடவிடைகள் நேர்ச்சிக் கணிப்பு. 1.

பொழிப்பு : புடவிகள் [பிரபஞ்சம் (Universe)] பலவாகும். அவற்றுள் ஒன்றினது, கடற்கரையின் புல்லிய மணலைப் போன்ற இவ்வுலகம், அடர்ந்த காடுபோலும் செறிந்த விண்மீன்களை யொட்டிய அண்டங்கள் பல கோடியாகும். இவற்றுள் இடமும், அளவுகளும், எட்டுத் திசைகளும் இவ்வுலகத்திற்கென உருவாக்கிக் கொண்ட ஆக்கங்களாம். வினாக்களும் அவற்றுக்கான விடைகளும் இங்குள்ள நிகழ்ச்சிகளின் அடிப்படையில் எழுந்த கணிப்புக் கூறுகளாம்.

I THE WORLD

1. THE NATURAL STAGE.

In universe that's like sea sand,
Many are the World forests of star bands ;
Place, measure, directions're man's make ;
Questions, answers're in events' wake. 1

Of the universe many in number, one is the sea and the earthy world is but a trifle of sand on the sea-shore. The worlds about the thick forest of stars are in crores. In these, places measurements of distances between and directions in which each is situate are of man's making. Questions and replies thereto are occasioned by incidents that take place.

2. உறழ்ச்சி நிலை.

பல்லாயிரங் கோடி கோள்கள் பரிதிமீன்
எல்லாம் உறழ்ந்திங் கியைதலால்—கல்லாத
கற்றே மெனவொருகாற் கல்லே மெனவொருகா
லுற்றே மெனவொருகா லோர்ந்து. 2.

பொழிப்பு : பலவாயிரங் கோடியளவிற் கோள்களும், அவற்றை இயக்கும் கதிரவன்களும், அவைபோலும் மீன்களும், தனித்தும் சேர்ந்தும் மாறுபட்டும் இவ்வுலக வுருண்டைக்கண் இயைபு கொண்டிருப்பதால், இங்குள்ள உண்மைகளை முற்றுங்கல்லாத நிலையில், 'கண்டறிந்து கற்றேம்' என ஒரு பொழுதும் 'கல்லேம்' என ஒருபொழுதும், 'ஆராய்தல் நிலையில் உள்ளேம்' என ஒருபொழுதும், மாறுபட எண்ணிச் சொல்லும் நிலையேற்படும்.

2. REVOLVING STATE,

Crores are planets, stars round the sun
Their stay's in orbit's move To shun
Knowledge longing for more, research
For Truth will change often in speach. 2.

Thousands and thousands are the planets and the suns that make them move jointly and severally arround them, in their respective orbits. For those who do not know the real state of things, to say that they have learnt all that is to be known or to say that they do not wish to know anything or that they are investigating into the real state of things is but natural.

૩. அறிவு மருட்சி நிலை.

உருண்டை உலகம் உருள்விழிக்குத் தட்டாய்
இருண்டொளிரும் தன்மைத் தியல்பின்—மருண்டறிவால்
உண்மை இலவென்பார் இன்மை உளவென்பார்
அண்மை தொலைவென்பார் ஆம்! 3.

பொழிப்பு: உருள்வதும் உருண்டையானதும் ஆகிய இவ் வுலகம். அதுபோல் உருள்வதும் உருண்டையானதும் ஆகிய விழிகளுக்குக் காட்சியளவில் தட்டைபோல் இருள்வதும் ஒளிர்வதும் ஆகிய தன்மையில் இயங்குவதால், அதில் உள்ள உயிர்களின் மருட்சி பொருந்திய அறிவினாலே உண்மை நிலைகளை இல்லை என்றும், இன்மை நிலைகளை உண்டு என்றும்; அண்மையைச் சேய்மையென்றும், சேய்மையை அண்மையென்றும் மயக்கமுறச் சொல்லுவர் ஆம்.

3. ILLUSIVE STATE.

To rolling eyes flat looks round world:
By nature two sights are to be told
Confused can't know what is or not:
And say what's for to be as not. 3.

The world that is round whirls and whirls. To the eyes of similar nature, the world that is round looks fiat and what is bright looks dark, so to lives of cnnfused knowledge, what really is looks to be non-existant and what is not appears to exist, what is far appears to be quite close and what is near appears to be far off.

4. துய்ப்பு நிலை.

மலையிற் கடுகுபோல் மண்ணுலகில் மாந்தன்!
நிலையிற் பெரிதாகும் நீள்நினைவு! வாழ்க்கை
அலையிற் றுரும்பாகும்! அங்காப்பும் துய்ப்பும்
இலையிற் பனித்துளியாம் இங்கு! 4.

பொழிப்பு: மலையளவு போலும் உள்ள இம் மண்ணுலகில் மாந்தன் நிலை கடுகளவு போல்வதாம். அவன்றன் உணர்வு நிலைகள் யாவற்றினும் பெரிது அவனின் நீண்டுயர்ந்த நினைவேயாகும். அவனின் வாழ்க்கையோ திரைத்து எழுந்து நுரைத்து வீழ்கின்ற அலையின்கண் சிக்கிய துரும்பு போலும் அலைவு சான்றதாம். மற்று, அவனின் ஆசை அவாவுதல்களும், அவற்றால் முடிந்த நுகர்ச்சி நிலைகளும், இலையின்மேல் உள்ள பனித்துளி போல் கவர்ச்சியும் சிறு நேர நிலைப்பும் கொண்டதாகும், இவ்விடத்து!

4. STATE OF EXPERIENCE.

Mustard to mount is man to world:
Tallest feelings' place thought doth hold
Life is a mote adrift in waves:
Longings and joys are dews on leaves. 4.

In the world that is like the high mountain, man is just a mustard and the highest and tallest of all his feelings is his thought. His life is like the straw afloat in the high tide and ebb of the waves and his longing for enjoyment and actual experience are like the dew drops at the end of the leaves. So bad is the duration and stability!

5. அழிவு நிலை.

நின்றுநிலை நில்லாது நீண்ட நெடுவானில்
தொன்றுமுதல் ஈர்சுற்றுத் தொல்லுலகம்—அன்றொருகால்
தாயொளியும் ஒல்கத் தணந்து நிலைமாறிப்
போயழியும் கங்குற் பொடிந்து. 5.

பொழிப்பு: காட்சியளவான் நின்றது போலும் இருந்து, கருத்தளவான் ஒரு நிலையில் நில்லாமல், விழிக்கும் மொழிக்கும் எட்டாத நெடிய வானத்தில், தோன்றியது முதல் இரண்டுவகைச் சுற்று இயக்கங்களைக் கொண்டதாகிய இத்தொன்மையான உலகம், என்றோ ஒரு காலத்தில் தனக்கு ஒளி நல்கும் தாயாகிய கதிரவனின், ஒளி குறைந்து குளிரடைதலால், தன் நிலையில் திரிபுற்று, அதனின்று விலகியோடி இருட் பகுதிக்குள் புகுந்து பொடிந்து அழிவதாகும்.

5. STAGE OF ANNIHILATION.

Steady appears changing sky vast.
Old world has two moves from time past:
Light source may die out cool one day:
Likewise earth shall change in its stay. 5.

In the sky that appears stable and is too vast for sight or speech, the old world has two kinds of moves from the very start and one day darkness is sure to envelop it when the sun that is the source of light dies out, losing all its light and turning cold. And so shall the earth move away from its position, be pounded into powder and hid in its dark part.

2. நாட்டியல்.

1. ஆட்சி நிலை.

தனிமை குடியரசு தன்னுண்மை ஆயம்
எனினுங் குடிகட் கிடரியல்பாம்; வாய்மை
இனிமை நடுநோக் கெதிரறிதல் கல்வி
முனிமற லற்ற முகத்து! 6.

பொழிப்பு: தனியரசு, குடியரசு, வல்லதிகார ஆட்சி, அறிவர் குழு ஆளுகை எனும் நால்வகை ஆட்சியெனினும், குடி மக்கட்குத் துன்பம் இயல்பேயாகும்; அவ்வாட்சிக்கு வாய்மை, இன்னுரை, நடுநோக்கு, வருவதறியும் முன்னுணர்வு, கல்விச் சிறப்பு, தீமை, பகை இரண்டையும் முனிந்து காக்கும் தறுகண்மை ஆகியவை அற்றுப் போகின்ற விடத்து!

2. NATTIYAL.

1 OF THE RULE.

Rule by one, or mass, dictator, council
Shall people's life with suffering fill.
Truth, sweetness, justice, foresight, culture
To right. The wrong and enmity venture. 6.

The rule that must be one of the four, namely: monorchy, democracy, autocracy or by an executive council, will naturally lead to the suffering of the people, unless truth, sweetness (of speech), equity, foresight and (culture of born) good education can boldly wipe clean all wrong and enmity in the land.

2. சட்ட நிலை.

அமைத்த வதிகாரத் தாள்வோர்க்குச் சார்பாய்
சமைத்துக் கொளும்நெறியே சட்டம்—இமைத்துரைப்பின்
ஆனைக் குழுசெய் யறநெறியாங் கோரேழைப்
பூனைக் குதவுமெனல் பொய். 7.

பொழிப்பு: எவ்வழியேனும் தம் வலிமையான் அமைத்துக் கொண்ட அதிகாரத்தினாலே ஆளவந்தவர்கள் என்றென்றும் தங்களுக்குச் சார்ந்து வருவதாக முன்னறிவுடன் உருவாக்கிக் கொள்ளும் வழியமைப்பே சட்டம் எனப்படுவதாகும். விளங்கச் சொல்வதாயின், யானைகளே சேர்ந்த குழுவொன்று செய்யும் அறமெனப் பெயர்பெறும் சட்ட நெறிமுறைகள், ஆங்கு ஓர் ஏழைப் பூனைக்கு உதவிவிடும் என்பது பொருளற்ற உரையேயாகும்.

2. ABOUT THE LAW.

Law shows how those in power carry fain
The rule of the country; to be more plain,
Council of tuskers chalking out a way
To keep a poor cat is not truth to say. 7.

The way, so chalked out, with a keen foresight, by those, who engineered to form a government and to come into power, as to be helpful to them for ever and ever is what is called law. To be more plain, to say that an executive council of elephants formulated a code of rightousness for the benefit of a poor cat is to say a lie.

௩. அரணிலே

சேய்க்குத்தாய் கன்னிதந்தை சேயிழைக்கு வன்கணவன்
வாய்க்குமகன் ஈன்ருேர்க்கு வன்காவல்—தேய்க்கரிய
ஐந்தின் வளத்தெனினும் ஆற்றலிழந் தார்க்கென்னும்
ஐந்தினுங் கொள்ளா வரண். 8.

பொழிப்பு : குழந்தைக்கு அதன் தாயும், கன்னிப் பெண்ணுக்கு அவள் தந்தையும், சிவந்த நகையணிந்த மணங்கொண்ட ஒருத்திக்கு வலிமை மிக்க அவள் கணவனும், பெற்ருேர்க்கு வாய்த்த மகனும் வன்மை மிக்க காவலாம். அழித்தற்கு அரிய ஐந்திணை வளஞ்சான்ற ஒரு நாட்டிணை ஆள்பவர் எனினும், தன்னுற்றலை இழந்தவர்க்கு, ஐம்பூத வழியினும் கொள்ளமுடியாத அரணிருந்தும், என்ன பயனைத் தரும் ?

3. ON FORTRESS.

Ma's to babes, Pa's to maids and women's lords,
And son to parents are natural guards;
Those of regions five, who lose their power,
Will find no use in element's tower. 8.

The mother t o her babe, father to the maid, the husband to the married woman and son to the parents are the natural guards. If by any chance this guardship is lost even for the prosperous in regions five, with the loss of the power they had; while in authority, even the invinsible fortress on any of the (five) elements will be of no avail.

4. ஒறுப்பு நிலை.

நயன்செய்து நாட்டந் திசை திருப்பி நன்முற்றின்
வயன்செய்து நோக்கம் வரைக—பயனின்றே
சொல்கழிபூண் கோட்டமுயிர் சோரத் தடிதலென்னும்
வெல்வழியொன் றில்லா வினை. 9.

பொழிப்பு : மக்களுக்கு நயன்மை (நீதி) செய்து, அதன்வழி அவர்களுடைய புன்மை நாட்டங்களை வேறு திசைக்கண் திருப்பி நல்வழியில் அவற்றை வயப்படுத்தி, ஆள்வோர் தம் நோக்கத்தை நிறைவேற்றுக. மற்று, எச்சரித்துக் கடிந்து சொல்லுதல், கழி கொண்டு அடித்தல், பூட்டிட்ட சிறையில் தள்ளுதல், உயிர் போகும் படி தண்டித்தல் என்னும், குற்றம் செய்வோரை அதனின்று மீட்டு வெல்கின்ற வழியொன்று இல்லாத வினைகளால் பயனில்லையாகும்.

4. THE WAY TO PUNISH.

Rulers should be just, to lead mass aright
Turn them to proper ways; then mark right;
Useless will be warning, rod or prison,
Or a thrashing to death to see reason. 9.

The rulers are to carry on the rule very justly and thereby turn away the outlook of the people from the lewd ways and thus have their aims fulfilled. It is useless to look to warning or the rod or the prison or thrashing to death to make a wrong door take to right ways of living.

5. அரசு நிலை.

மன்னன் மனநலத்தால் மக்கள் மதிநலத்தால்
தன்னென் அதிகாரத் தார்நலத்தால்—நன்னெறியோர்
சார்ந்த குழுநலத்தால் சாருமே நல்லரசு
வார்ந்த குடிநலமும் வாய்த்து. 10.

பொழிப்பு : மன்னராட்சி யெனின் அவன் மனநலத்தைப் பொறுத்தும், மக்களாட்சி யெனின் அவர்கள் மதிநலத்தைப் பொறுத்தும், வல்லதிகார ஆட்சியெனின் அதன்பால் உள்ள படை நலத்தைப் பொறுத்தும், நல்லறிஞர் சார்ந்த குழுவினது ஆட்சி யெனின் அக்குழுவினரைப் பொறுத்தும் அமைவதாகும் நல்லதோர் அரசு ; அவ்வரசுக்குத் தக்க குடிமை நலன்களும் வாய்ப்பாக விருக்குமானால் !

5. OF THE RULE.

Good rule depends on the good will of king,
Or the people, the forces' right swing,
And each member of the council, if land
Can boast people to be of the right band. 10.

The good rule of the land depends more on the good-will of the king in the case of monarchy, of the people in the case of democracy, of the forces in the case of autocracy, and of the individual members that go to make up the executive council provided further that the land can boast of its people to be of the right sort.

(மறந்துபோன தலைவனுக்குத் தலைவியின் நிலைகூறி. அவளொடு புணர்த்திய தோழியின் அன்பைத் தலைவி வியக்கின்றாள். இப்பாடல். 1959. பிப்ரவரியில் வானம்பாடியில் வெளிவந்தது.)

தோழியின் அன்பு.

"இருகண்கள் வீழருவி எரிபோலுஞ் சிவப்ப,
இருங்குழலோ புயல்பாய்ந்த முகில்போலுஞ் சிதைய,
முருகவிந்த தாமரைபோல் இதழ்நுனியும் கறுப்ப,
முத்திழந்த சங்காகி பணிக்கழுத்தும் தாழ,
அருகலைந்த வகைபோலும், ஆடுகொடி போலும்,
ஆசையெனும் பெருவளிக்குச் சிற்றிடையும் ஒசிய,
பருகுபுனற் கலையுமொரு பாவையிள மான்போல்,
பசிமடிந்தாள் இவளொருத்தி 'பார் பார்' என் றுரைத்தாள்.

தாயிழந்த சேயாகித் தனித்தழுகும் இளையோள்!
தருமுணவை முப்பொழுதும் தள்ளுகின்ற கையோள்!
வாயிழந்த புழுவெயிற்கு வாடுகின்ற வகைபோல்,
வனப்பிழந்து, காதலெனும் கடுவெயிற்குச் சுருண்டே
பாயிழந்த வெறுந்தரையில் படுத்துருளும் மெய்யோள்!
பனி நிலவும் காய்ச்சுதெனும் பான்மையுளங் கொண்டோள்!
காயிழந்த மரம்போல களையிழந்த மயில்போல்
கண்ணுறங்கா ளிவளொருத்தி 'காண்காண்'
[என்றுரைத்தாள்!

உரைத்தவளின் அன்புமொழி உள்ளம்போ யுருக்க,
உண்மையெனுங் குன்றேறி நின்றவனுய் என்னை,
நுரைத்த புளிங் கள்ளருந்தி நிற்பானைப் போல
நோக்கினான்! நோக்கியென் னுறுதியினை அன்பால்,
கரைத்தவனைப் போல்நெருங்கக் கழன்றதடி நாணம்!
கணப்பொழுதில் அருகிருந்த தோழிமறை வானாள்!
அரைத்திடுநற் சந்தனம்போல் குளிர்ந்ததடி உள்ளம்!
அணு அணுவாய் வளர்ந்துமலை யானதவன் அன்பே!

“முட்டாள், அயோக்கியன், காட்டு விலங்காண்டி”

[இவை பெரியார் சிலையின் கீழ் பொறிக்கப்பட்ட பொன்மொழிகளில் உள்ள சொற்கள். இவற்றை எடுக்க கொடுத்திருக்கும் வேண்டுகோளுக்கு நாம் மறுப்பு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அதன்படி கோவையில், 25–2–76 அன்று காலை 9-30 மணிக்கு தமிழக ஆளுநர் அவர்களிடம் திரு. இரா. கத்தூரி, க, இ, ச. இ. வழக்கறிஞர் அவர்கள் முன்னின்று ஒரு குழு கொடுத்த வேண்டுகோளின் ஆங்கிலப் படி கொடுக்கப்பட்டுள்ளது. இதன் தமிழாக்கம் பின்பு வெளிவரும். இதைப்போன்று ஆளுநர்க்கு வேண்டுகோள் அனுப்ப விரும்புபவர்கட்கு பயனுடையதாக இது இருக்கும். —அமைச்சர்.]

IN THE PRESENCE OF THE GOVERNOR OF THE STATE OF TAMILNADU

MEMORANDAM No. of 1976.

This Memorandam of the citizens of Coimbatore District regarding the inscriptions on the pedestals of Periar Ramaswamy's statues, submits and prays as fallows :—

1. We as non-political and nonparty people welcome your announcement that the erstwhile practice of the government to grant interviews to the public and hear their grievances in person will be continued, and we are convinced that such a course will go a long way to solve many problems facing the people.

2. Regarding the report that certain requests were made to you to remove or erase eertain inscriptions on the pedestals of the statues of late Father Periar E. V. Ramaswamy as

calculated "to wound the feelings of people". We, the signatories to this memorandam, appeal to you to consider this memorandam and not to accede to such requests :—

3. Our constitution has given us a secular state, affording all opportunities for the propagation of all view points. Knowledge, to be complete, must not be one sided but it must be exhaustive and allround.

4 The erection of the statues of periar E. V. Ramaswamy has been done with the funds, contributed by the public ; and those statues with same inscriptions have been declared open ceremoniously in the presence of large gathering of people and with the great approval and ovation from the public and none objected to the same. Such exhibition of inscriptions is one of the ways of propagation of our ideals.

5. If the public did not approve those inscriptions they would not have contributed so liberally, because the views of periar Ramaswamy are so well known.

6. A few of the statues were declared open by late lamented Mr Kamaraj.

7. The persons, who petitioned to you for removal of the said inscriptions do not represent the public and they appear to be bigoted, motivated persons and ignorant of the principles of any religion, especially the "Hindu" religion.

8. "Lokayadham" a materialistic dogma based on Atheism is one of the six accepted tenets of "Hindu" religion. An Athiest is also a Hindu ; So the principles of Athiesm and rationalism are not alien to Hinduism. Mahatma Gandhi says, 'A man may not believe in God and still call himself a Hindu".

9. Mahaveera Varthamanar established Jainism in India about 2,500 years ago on the principles of atheism and rationalism.

10. Gowthama Buddhar established Buddism on Agnostic principles in India more or less at the same time

11. Even during the days of "Manimekalai". an ancien-Tamil classic of the Sangham age, people following various faiths more than six in number had been coexisting and each one was practising his own religion: Jainism, Buddhism and materialism are three of them.

12. Late Prime Minister Jawaharlal Nehru, a great rationalist, says" that the materialist philosophy was professed in India for centuries and had at the time a powerful influence on the people. In the famous Arthashastra by Kautilya, it is mentioned as one of the major philosophies of India". and "It is science alone that can solve the problem of hunger and poverty, of insaniation and illiteracy, of superstition and deadning customs and traditions, of vast resources running to waste, of a rich country inhabited by starving people, who indeed can afford to ignore science today? At every turn we have to seek its aid. The future belongs to seience and to those who make friends with science"

13. So the propagation of Athiesm has been in vogue in this country for more than three thousand years. Ever since people began to believe in the existance of God, there were people who denied the existance of God. Both the believers and non-believers have been coexisting for centuries, each propagating their ideals in their own way.

14. In each religion there are ever so many divisions and sub sections with contradicting conceptions and theories. Mohamedan religion denies the god of the Christians and the Hindus; the Christians deny god-hood of Allah and the Hindu deities. The Hindus do not accept the gods of Christians and Mahamadans. Thus each religion, each division and sub division has totally varying conceptions of god.

15. Periar Ramaswamy has been acclaimed as one of the greatest thinkers of modern Age with millions of followers. For over half a century, Periar Ramaswamy was part and parcel of the public life of Tamil Nadu in particular and Southern states in general. He has influenced the public life of this part of India as no other single individual has done in recent times.

16. Periar Ramaswamy is a recolutionary social Scientist. He is an original thinker, and he is well-known as the "hero of Vaikam". U. N. E S. C O. Manram honoured him by giving him the title of "The Secretes of South East Asia" in the year 1970. He had refused to form Government of the composite Madras State in the years 1940 and 1942, when requested by Governor, Governor general and even by Mr. Rajaji.

17. The public have his statues in appreciation of his services rendered to the people and to propagate his social idealogies : that is why his doctrines are inscribed in the pedestals, on which the statues are erected ; the importance is more for the doctrines inscribed than for the statues ; or else there is not much difference between the statues of Periar and other statues and the idols in the temples.

18. It is reported to have been urged that such inscriptions are wounding the feelings of the public. It has already been pointed out in this memorandam that the allegation that the inscriptions wound the feelings of the public is not correct, since all the statues are erected and financed by the public. The expression "wounding the feelings" is vague, uncertain and un - understandable. There is no accepted test of measuring the feelings ; such irritation of feelings is unnatural and artificial ; what irritates, wounds or upsets one, will not have any effect

at all on others. The believers-petitioners do not seem to get agitated by the sale of Hindu gods in the continental and American Markets as curios. So there is no truth in the said allegation. The truth seems to be that a few bigoted superstitious persons do not agree with rationalist propaganda.

19. There are highly insulting and damaging recitals in the Hindu scriptures levelled against Buddha, Mahaveerar and rationalists. Recitals of the Hindu religious songs and the erection of the temples and worship therein are certainly wounding the feelings of the Athiests and rationalists, and yet we put up with and tolerate the same. For example Christians describe the non-Christians as heathans.

20. Vegetarians and few other religionists will not like meat, beef or pork selling in the market and will get agitated on seeing the same. But that does not mean sale of meat, beef or pork has to be prohibited.

21. We humbly submit any interference on the part of the government in any way with inscriptions will be against principles of secularism, justice and law and will lend colour to the impression that this government is inclined to perpetuate the old order and support reactitionaries and suppress free expression of views and is partial.

22. When a citizen of this country claims a right to believe and say that there is god and propagate his faith, it is not just, or legal for him to deny the right of another citizen to disbelieve, deny the existance of god and propagate his ideals, If one citizen has a right to build temples and sing songs of belief that unbelievers will be sent to hell, the unbeiever has equal and the same right to instal statues and exhibit their ideals by inscribing them.

23. We humbly submit and bring to your kind notice that the guiding principle to decide the propriety or the impropriety of the request of the believers is whether such a demand is fair, just impartial legal and is in accordance of the secular nature of our government. Public opinion is vague, uncertain, undefinable and prejudiced. Public opinion may be wrong unjust inequitable and untrue; In any view it is not law.

24. It will be presumptious on our part to go on enumerating reasons after reasons, since we are sure that this memorandam is submitted to the most enlightend representative of the government.

Therefore these memorialists humbly submit that they may be given as much freedom and facilities to propagate rationalism and Athiesm as given to the believers and religionists and they also pray the inseriptions in the pedestals of Periar's statues and other inscriptions, wall posters, and the stone inscriptions may not be interfered with and may kindly be safeguarded and justice rendered.

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்,
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு.
ஆண்டுக் கட்டணம் :	12 உருபா	24 உருபா	24 உருபா.
அரையாண்டுக் கட்டணம்:	6 ,,	12 ,,	12 ,,
தனியிதழ் :	1 ,,	2 ,,	2 ,,

ஓரிதழுக்கு உருபா. 2 மேனி முன்பணம் கட்டக்கூடிய
விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !

குமரி(இலெமுரியா)க் கண்டம் - மற்றொரு கருதுகோள்.

[சோவியத் சிறப்புக் கட்டுரைகள்]

முன்னொரு காலத்தில் இருந்ததாக நம்பப்படும் குமரிக் கண்டத்தைப்பற்றிய புதிய செய்திகள் மிகவும் சுவையாக இருக்கின்றன. இதை "கோண்டுவானு பைதிரம்" என்று அறிவியலறிஞர் அழைக்கின்றனர். இப் பைதிரத்தில் கனி வளங்கள் ஏராளமாக இருந்தன என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

ஏறக்குறைய இருபது கோடி ஆண்டுகளுக்கு முன்னர் இந்த நிலப் பகுதியானது சிதைவுற்று தனித்தனிக் கண்டங்களாக பிரிந்தன. அதாவது, இப்போது உள்ள ஆத்திரேலியா, அண்டார்க்டிகா, தென் அமெரிக்கா, ஆப்பிரிக்கா, இந்துசுத்தான ஆகியவை. முன்பு ஒன்றாக இணைந்து 'கோண்டுவானு' கண்டமாக, அதாவது குமரிக் கண்டமாக, விளங்கின என்று புகழ்பெற்ற சோவியத்து நிலவியலாளர், பேராசிரியர் எம். இராவிச் "இசுவெசுதியா"வில் எழுதுகிறார்.

ஆத்திரேலியாவில் அவர் பொறுக்கிய கற்களுடன், சோவியத்து ஆய்வாளர்கள் அண்டார்க்டிக் கண்டததிலிருந்து கொண்டுவந்த கற்களையும் ஒப்பிட்டுப் பார்த்த பின்பே, இந்த முடிவுக்கு அவர் வந்துள்ளார், தவிர, ஆத்திரேலியா, அண்டார்க்டிக் கண்டத்தில் உள்ள மலைகளின் அமைப்புக்களும் ஒன்றுபோல் உள்ளன. இதை நிறுவும் தெளிவான புதிய சான்றுகளும் அவருக்குக் கிடைத்துள்ளன.

குமரிப் பைதிரத்தைப் பற்றிய ஈடுபாடு, வெறும் கற்பனையின் அடிப்படையில் அமைந்தது அல்ல என்கிறார் பேராசிரியர் இராவிச். குமரிக் கண்டத்தைப் பற்றிய புதிர்கள் தீர்க்கப்படுமேயானால், தென் பகுதியில் உள்ள எல்லாக் கண்டங்களிலும் சிதறிக் கிடக்கும் கனிப் பொருள்கள் பற்றி முன்கூட்டியே நன்கு அறிய இயலும் என்று அவர் கூறுகிறார். குமரிக்கண்டம் பற்றிய அவரது கருத்துக்களும், ஆய்வுகளும், நீடிக்கின்றன.

உள்ளத்தனைய துயர்வு.

(வானம்பாடி ஆண்டு மலர் 1-8-58-இல் வெளிவந்தது)

பரிதி நடந்துசெலும் பாதையிலும் தண்ணின்
அரிதாம் நிலவொளியின் ஆட்சியிலும் நன்கமைந்து,
காலப் பிரிவாலும் காற்றுலும் சீர்பெற்ற
கோலத் தமிழகத்தைக் கோளநூல் வல்லார்கள்
பாராட்டிப் பேசுகின்றுர் என்னும் பெருமையொடு,
சேரனென்னும் வீரன் செழுந்தமிழர் பாட்டனென்றும்,
சோழனென்னும் வேந்தனுக்குச் சொந்தம்யா மென்றுரைத்தும்,
வாழும் பழமதுரை வாழ்ந்திருந்த பாண்டியராம்
வித்தில் விளைந்திருக்கும் வீரஞ்சேர்க் கூட்டமென்றும்,
கத்திப் பழங்கதைகள் கூறி வருவதல்லால்,
நம்மில் வளர்ந்துவரும் நச்சடிமைக் கீழ்க்குணத்தை
இம்மி யளவேனும் எண்ணி நாம பார்த்ததில்லை!
வீரத் துயர்ந்திருந்த வேந்தரென்று பேசுகின்ற
சேரரொடு பாண்டியரும், சோழத் தமிழரசும்,
தம்முள் குலைவுற்றுத் தாழ்வெய்தி மாண்டதனை,
நம்முன் அறிந்திருந்தும் நல்லுறவு கொண்டதில்லை!
பண்டைப் பெருந்தமிழன் பான்மையினைக் கூறிடுங்கால்
அண்டை இருப்பவனை அன்பொழுகப் பார்த்ததில்லை!
பாரியென்றும், ஓரியென்றும் பைந்தமிழின் வள்ளலரைக்
கூறிடுவ தல்லால் குறுணையன வீந்ததில்லை!
காப்பியங்கள் ஐந்தென்று சொல்லிக் களிப்பதல்லால்
காப்பியஞ்சொல் நல்லுரைக்கும் காதைக் கொடுப்பதில்லை!
கீரன் துணிவுபற்றிக் கூறிமகிழ் வேற்பதல்லால்
வீரத் துணிவில்லை; நெஞ்சு வலுவில்லை!
பிறவிக் குலமட்டும், பேண்குறியும், பன்னூலை
ஓதி விடுவதனுல் ஒய்ந்துவிடப் போவதில்லை!
கீழென்றும், மேலென்றும் கொள்ளுதலால் இந்நாடு
பாழடைவ தல்லால் பயனடையப் போவதில்லை!
செல்வச் சிறப்பென்றும், ஏழ்மைச் சிறுமையென்றும்,
பல்வாறு கூறிப் பயனெதுவும் கண்டதில்லை!

கோளறிந்து திங்கள் குடியேறுங் காலத்தில்
வாளெறிந்து, வில்லேவி வாழ்ந்துவிடப் போவதில்லை.
அண்டத் திருவுலகை ஆய்வாளர் நாளும் போய்க்
கண்டறியும் காலத்தில் காலமொன்றும் செய்வதில்லை!
மெய்யில் அழுக்கேறி, நெஞ்சில் இருள்வைத்துக்
கைகூப்பிப் போற்றக் கடவுளருள் (!) சேர்வதில்லை,
தம்மைப்போ லோருயிரைத் தாழ்த்தி நடக்கையிலே,
செம்மையாய்ப் பண்டை வரலாறு பேசுவதில்
நாணமில்லை! மக்களுள்ளே நல்லொழுங்கு தானுமில்லை
மாணப் பெரும் பேச்சில் மக்களுயர் வேற்பதில்லை!
" எவ்வுயிரும் ஓருயிராய் எண்ணீர்! பெருமையுறுஞ்
செவ்வை ஒழுங்கேற்பீர்! சேர்ந்தொருங்கே வாழ்வீர்!
உயரன்பு கொள்வீர்! உறுந்தமிழ் நூல் கற்பீர்!
அயர்வின்றி எப்பணியும் ஆற்றி உயர்வடைவீர்!
நன்றல்ல நீக்குவீர்"! என்று நவின்றொருவன்
ஒன்றிணையும் கொள்ளா தொழிந்து விடின் நாமவனை
என்னென்று கொள்ளுவோம்? எள்ளி இகழோமா?
பொன்னென்று கொள்ளுவோம்? போவென்று தள்ளோமா?
உள்ளத் துயர்வில்லா ஓதுகல்வி கல்வியல்ல!
வள்ளுவரும உள்ளத்து வாய்மை உயர்வென்றார்!
வெள்ளத் தனைய மலர்நீட்டம்; மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

" தமிழ்ச்சிட்டு "

சென்னை - 5.

	உள்நாடு	கொழும்பு	பிறவெளிநாடு
ஆண்டுக்கட்டணம் உருபா	4-00	9-00	9-00
தனியிதழ் ,,	0-35	0-75	0-75

(அரையாண்டுக் கட்டணம் இல்லை.)

ஓரிதழுக்கு 75 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் எழுதிக்கேட்க!

இந்தியோ, இந்தி!

[நடுவணரசுச் செய்தித் தொடர்புத் துறை அமைச்சர், (Minister of Communications, India) திரு. சங்கர் தயாள் சர்மா அவர்கள் தம் துறைகளுக்கு விடுத்த அறிக்கையை வெளியிட்டுளளோம். இதை இந்தியில் வெளியிடப் போதிய ஏந்தின்மையால் அதன் மொழி பெயர்ப்பாக அவர்கள் பின்புறம் வெளியிட்டிருந்ததை வெளியிடுகிறோம்.—அமைச்சர்.]

APPEAL.

It is incumbent on all of us to contribute to the development of the national language. Effective steps in this direction have to be taken by the Secretariat as well as the P & T Department and other organisations under the Ministry. We have to accelerate the pace of use of Hindi. It should be our objective that all of us should do some of our work in Hindi every day and speed up the pace of use of Hindi in official work.

I take this opportunity to appeal to the personnel working in this Ministry and the Organisations attached to it to take particular interest in stepping up the use of Hindi in Government work. The employment of simple Hindi, as is commonly spoken and understood, will make our work easy. It will also help in contact with the public, assist the development and progress of the national link language and contribute to national integration.

The Prime Minister has from time to time, stressed the importance of use of Hindi in official work. We should avail of the opportunity provided by this era of discipline, and increase, to the best of our capacity, the use and the rate of growth of Hindi.

S. D SHARMA.

To

All the officers and Sections in the

(i) Ministry of Communications (Main).
(ii) Directorate General of Posts & Telegraphs including all the subordinate offices
(iii) Directorate General of Overseas Communications Services.
(iv) Monitoring Organisation.
(v) Indian Telephone Industries Ltd,.
(vi) Hindustan Teleprinters Ltd,.

ஊர் அறியும் முன்.

(வானம்பாடி 15-5-58-இல் வெளிவந்தது)

வேடிக்கை என்னடி தோழி—உன்றன்
வாடிக்கை விட்டிதைக் கேளடி நாழி!

(வேடிக்கை)

பாடிக் கை யாழ் ஒன்று தூக்கி—உளப்
பாங்கினில் யான்காணுப் பேரன்பு தேக்கி,
நாடிக்கை தொட்டெனை ஊக்கி—தனை
நம்பென்ருன்; நம்பினேன்; நடப்பது நோக்கி!

(வேடிக்கை)

கோடிக்கை யாலென்னைச் சுட்டி—என்றன்
குறைகூறி ஊரினர் யாவரும் திட்டி,
கூடிக் கை கொட்டிடு முன்னம்—மணம்
கூட்டுக' என்றவற் கியம்படி சொன்னம்!

(வேடிக்கை)

தேடிக்கை கூட்டி என் முன்னே,—அத்
தீந்தமிழ்ப் பாணனை நிறுத்துக பொன்னே!
நீடிக்கைப் பொழுதினி வேண்டேன்—இதை
நினைவு கொள்; அன்றேல் உன் தோழி நான்
மாண்டேன்!

(வேடிக்கை)

மறைவு.

தென்மொழிப் புரக்குநரும், தமிழ் மறவருமான, மறை. நித்த லின்பனாரின் தாயார் வள்ளியம்மை 26-3-76 அன்று இரவு 2-15 மணிக்கு மறைந்தார்கள் அவருக்காகவும், அவர் குடும்பத்திற்காக வும் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

—அமைச்சர்.

தென்மொழித் தாளிகையின் வெளியீட்டு அறிக்கை.

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956,
19 ஈ. ஆ. (வகுப்பு) 8-ஆம் கட்டளைப்படி.)

1.	வெளியிடும் இடம் :	சென்னை-5.
2.	கால முறை :	திங்கள் ஒருமுறை.
3.	அச்சிடுவோர் பெயர் :	திருவாட்டி, மா. தாமரை.
	இனம் :	தமிழர்.
	முகவரி :	தென்மொழி அச்சகம், சென்னை-5.
4.	வெளியிடுவோர் பெயர் :	திரு. பெருஞ்சித்திரன்,
	இனம் :	தமிழர்.
	முகவரி :	தென்மொழி அச்சகம், சென்னை-5,
5.	ஆசிரியர் பெயர், முகவரி :	திரு. பெருஞ்சித்திரன், சென்னை 5.
6.	ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும்.	திரு. பெருஞ்சித்திரன், சென்னை – 5.

பெருஞ்சித்திரனாகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

15—4—1976,
சென்னை-5.

—பெருஞ்சித்திரன்,
(ஒப்பம்.)

பூங்குன்றன் வாழி!

தென்மொழி அன்பர் புலவர் அ. தங்கவேலு, க. இ., அவர்களின் துணைவி திருவாட்டி கற்பகம் அம்மையார், தி. பி. 2007, மீனம், 24-ஆம் பக்கலன்று, ஆண்மகவு ஈன்றுள்ளார். குழந்தைக்குப் பூங்குன்றன் என்று பெயர் சூட்டி, அந்நினைவாகத் தென்மொழிக்கு உருபா. 5-00 அன்பளிப்பு அனுப்பியுள்ளனர். நற்செல்வன் பூங்குன்றன் நீடினிது வாழ்க!

—அமைச்சர்,

தென்மொழியின்
தனித்தமிழ் வெளியீடுகள்.

ஆசிரியர் : பெருஞ்சித்திரனார்.

அவர்களின்

புதுமுறை இலக்கியங்கள்.

(இருப்பில் உள்ளவை மட்டும்)

1.	பாவியக் கொத்து	2—50
2.	ஐயை	1—00
3.	மகபுகு வஞ்சி	3—00
4.	பள்ளிப் பறவைகள் (குழந்தைப் பாடல்கள்)	3—50
5.	கற்பனை ஊற்று	2—50
6.	இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள்	0—75

* * *

"தென்மொழி"த் தொகுப்பு.

தென்மொழி — சுவடி 10, 11 ஆகியவற்றின் தொகுப்பு அழகாகக் கட்டடஞ் செய்யப்பெற்று விற்பனைக்கு அணியமாக உள்ளன.

மிகக் குறைந்த படிகளே உள்ளமையால் தேவைக்கு முந்துக!

ஒவ்வொன்றின் விலை உருபா.	12—00
ஷ பதிவஞ்சல் செலவுடன்	15—00

முகவரி :

அமைச்சர்,

தென்மொழி,

51, அருணாசல (ஆசாரி)த் தெரு, சென்னை-600005.

தென்மொழித் தாளிகையின் வெளியீட்டு அறிக்கை.

(நடுவணரசுச் செய்தித்தாள் பதிவுச் சட்டம் 1956,
19 ஈ ஆ. (வகுப்பு) 8-ஆம் கட்டளைப்படி.)

1.	வெளியிடும் இடம் :	சென்னை-5.
2.	கால முறை :	திங்கள் ஒருமுறை.
3.	அச்சிடுவோர் பெயர் :	திருவாட்டி, மா. தாமரை.
	இனம் :	தமிழர்.
	முகவரி :	தென்மொழி அச்சகம், சென்னை-5.
4.	வெளியிடுவோர் பெயர் :	திரு. பெருஞ்சித்திரன்,
	இனம் :	தமிழர்.
	முகவரி :	தென்மொழி அச்சகம், சென்னை-5,
5.	ஆசிரியர் பெயர், முகவரி :	திரு. பெருஞ்சித்திரன், சென்னை 5.
6.	ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும்.	திரு. பெருஞ்சித்திரன், சென்னை – 5.

பெருஞ்சித்திரனாகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நானறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

15—4—1976,
சென்னை–5.

—பெருஞ்சித்திரன்,
(ஒப்பம்.)

பூங்குன்றன் வாழி!

தென்மொழி அன்பர் புலவர் அ. தங்கவேலு, க. இ., அவர்களின் துணைவி திருவாட்டி கற்பகம் அம்மையார், தி. பி. 2007, மீனம், 24-ஆம் பக்கலன்று, ஆண்மகவு ஈன்றுள்ளார். குழந்தைக்குப் பூங்குன்றன் என்று பெயர் சூட்டி, அந்நினைவாகத் தென்மொழிக்கு உருபா. 5-00 அன்பளிப்பு அனுப்பியுள்ளனர். நற்செல்வன் பூங்குன்றன் நீடினிது வாழ்க!

—அமைச்சர்,

தென்மொழியின்
தனித்தமிழ் வெளியீடுகள்.

ஆசிரியர் : பெருஞ்சித்திரனார்.

அவர்களின்

புதுமுறை இலக்கியங்கள்.

(இருப்பில் உள்ளவை மட்டும்)

1.	பாவியக் கொத்து	2—50
2.	ஐயை	1—00
3	மகபுகு வஞ்சி	3—00
4.	பள்ளிப் பறவைகள் (குழந்தைப் பாடல்கள்)	3—50
5.	கற்பனை ஊற்று	2—50
6.	இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள்	0—75

* * *

"தென்மொழி"த் தொகுப்பு.

தென்மொழி — சுவடி 10, 11 ஆகியவற்றின் தொகுப்பு அழகாகக் கட்டடஞ் செய்யப்பெற்று விற்பனைக்கு அணியமாக உள்ளன.

மிகக் குறைந்த படிகளே உள்ளமையால் தேவைக்கு முந்துக!

ஒவ்வொன்றின் விலை உருபா.	12—00
ஷை பதிவஞ்சல் செலவுடன்	15—00

முகவரி :

அமைச்சர்,

தென்மொழி,

51, அருணாசல (ஆசாரி)த் தெரு, சென்னை-600005.

—இந்த மனத்தைத்தான் எந்தமிழ்ப் புலவோர்
வெந்தும் வேகாத மனமென விளம்பினர்!
தொண்டு பேணுவோர் தொடையில் எத்தனைக்
குண்டுக் குழிகள், வெள்ளை முடிகள்—என
எண்ணிப் பார்த்தே எடுத்த கணக்கை—
உண்ணி பிடித்த நாய்அணற் றுதல்போல்
எந்தத் தாளிலோ, எழுதி எழுதிச்
சொந்தத் தலைமயிர் புய்த்துப் புய்த்துச்
சொட்டையாய்ச் செய்து மொட்டையாய் நின்றது!
கட்டைபோ மளவும் இந்தக் கணக்குதான்!
ஐயா ஐயா அதன் பேர்
பொய்யா மொழியெனப் புகன்று கொண்டதே!

எதனைப் பார்க்கினும் எரிச்சல் படுமது!
குதலைச் சிரிப்பும் குடைச்சலே அதற்கு!
இல்லாது சொல்லி இருப்பது தவிர்க்கும்!
நல்ல சொற்களே நாவில் ஊருது!
நாற்றச் சொற்களே நறுக்கு நறுக்கென,
ஊற்றெடுத் ததனின் உளத்தொடு குதிக்கும்!
வெந்த உணர்வொடும் வேகாத அறிவொடும்—
சந்தனம் ஒருபுறம் சாணி ஒருபுறம்
இருந்தால், சாணியை எடுத்தெடுத்து முகர்ந்து
விருந்து போட்டதாய் எண்ணி வெதும்பும்!
ஒப்புர வில்லாது ஓயாமல் குடைந்து,
குப்புறப் படுக்கும் குள்ள மனம்—அது!
எவருடைப் போக்கினும் எதிரேறிப் போகும்!
துவருடை பூணுத் துறவியே போலும்—
தண்ணீர்ப் புகாத தக்கையே போலும்—
கண்ணீர் விட்டுக் கசிவதே போலும்—
எதனையும் நிறைவுறு திழித்து வெறுக்கும்!
புதைவதும் இல்லை! புலர்வதும் இல்லை!
சதையும் இன்றி எலும்பும் இன்றியோர்
விதையடிக் காத வெற்று நரம்பது!

அன்பர்கள் பொறுத்துக்கொள்க.

ஐயா சிறையிலிருக்கின்றமையாலும், தனியே நின்றியங்குவதாலும் சென்ற இதழ் முதல் ஏற்படும் அச்சுப்பிழைகளுக்கும், மற்ற பிழைகளுக்கும், அன்பர்கள் மிகப் பொறுத்துக் கொள்வார்களாக.

—பூங்குன்றன்.

தமிழ்த் தாய்ப் பத்து.

1. என்றுன் னகரத் திருவரி கூறி எழுதினரோ?
என்றன் சிலம்பக் கழலடி ஆணை இயற்றியதோ?
மன்றுண் ணமர்ந்து புலவர் துடிநா விளையமிழ்தத்
தன்றன் றிளமை அணையுந் தமிழே! அணிமொழியே!

2. மொழியா திருந்தார் முடவாய் புகுந்தொலி முன்முழக்கி
வழியா யிருந்து வடுவறு வாழ்க்கை யமைத்தவளே!
அழியா திளமை அருகாத் திருவளம் ஆர்ந்துயர்ந்தோர்
விழியா திரவும் பகலும் புரக்கும் விழிமணியே!

3. மணிமுடி யேறிக் கழகப் புலவர் மடிபுரண்டே
அணிமுடி சூட்டி அரசேய்ந் திருக்க அடிதழீஇத்
திணிதெலுங் கங்கன் னடமலை யாளந் துளுவமென
பணிமொழி பத்தொரு மூன்றும் பரவப் பரந்தவளே!

4. பரந்துயர் நற்சீர் பழுனிய நின்னைப் பரவியெழிற்
கரந்தவர் பல்லோர் கழலடி தாங்கிக் கழியிளமை
இரந்தவர் பல்லோர்! இடர்ந்தவர் பல்லோர் எனினுமுனைப்
புரந்தவ: உள்ளப் பொழில்மணையேறிய பூவையளே!

5. பூவை நினதெழிற் பேசற் கெளிதோ புலமையர்க்கே!
கூவைத் திலங்குங் குறைவறு பல்லா யிரமொழிக்குள்
நீவைத் தொளிரும் நெடுநூற் பரப்பில யேகுறள்தீம்
பாவைத் திருக்கும் பசுமைத் திருவே பழம்பிறப்பே!

6. பிறவாப் பெருஞ்சீர் இலக்கியத் தோடின் னிலக்கணமும்
அறவோர் புகழும் அறநெறி நூற்கள் அளவிறந்தும்
நறவாப் பிழிந்தே நறுநூற் புலவோர்க் களிப்பவளே!
இறவாப் பெருமு தொருத்தி மொழிநா வினிப்பவளே!

7. இனித்த நறுவாய் நடம்விளைத் துள்ளத் துயிரிலெலாம்
துனித்த வொலியாய்த்துலங்கி இயலிசை நாடகமாய்
நுனித்த புலனே புனற்கோள் எரிகோள் நுழைந்திருந்துந்
தனித்த மொழியே விழியே ஒளியே தமிழரசே!

8. அரசி உலகிடை அன்றன் றுயரும் அயல்மொழியின்
வரிசை உணர்வேம்! வளங்கெழு நின்சீர் வழுவலெலாம்
எரிசேர் இழிஞர் குடர்க்கிட நின்னை இழிப்பதுவே!
முரசே அவர்தம் முழுமடம் ஞாயிறு முன்பனியே!

9. பணிக்குன் றதிர்த்த பழம்பே ரரசர் பணிந்துயர்த்த
இனிக்குந் தமிழ்ப்பா வெழுதும் இணையறு வின்புலவோர்
கனிக்குந் நிகராப் பலநூல் எழுதிக் களித்ததெல்லாம்
தனிக்குன் றணையாய் இனிகாண் குவமோ தவழ்புகழே!

10. கொழுங்கட் பிழிவே! நறவே! நறுஞ்சுவைப் பால்கலந்த
பழங்கெழு ஊணே! உடலே! உயிரே! பணிவொடுசீர்
வழங்கெஞ் சிறுநா வளரின் னிசையே! இயல்நடமென்
றெழுங்கலை யேமகிழ் வேவுல கேயிணை யில்லையன்றே!

தென்மொழி மின் அச்சகம், சென்னை – 600005. தமிழகம்.